மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

07.08.2022 ஞாயிற்றுக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# 40 அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துமாறு ஐ.எம்.எப் கோரிக்கை

இலங்கை அரசின் கீழ் நட்டத்தில் இயங்கும் 40 அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துமாறு ஐஆகு கோரிக்கை விடுத்துள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொரோடா லக்ஸ்மன் கிரிஎல்ல குறிப்பிட்டார். ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர். எதிர்கட்சியில் இருந்து கொண்டே அரசுக்கு உதவி செய்ய முடியும். அரசாங்கத்தில் இணைந்து கொண்டுதான் அரசுக்கு உதவ வேண்டும் என்றில்லை. இலங்கை அரசின் கீழ் நட்டத்தில் இயங்கும் 40 அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துமாறு ஐஆகு கோரிக்கை விடுத்துள்ளது இது போன்ற விடயத்தில் நாம் பாராளுமன்றில் பேசி முடிவெடுக்க அரசுக்கு உதவி செய்யலாம என அவர் குறிப்பிட்டார்.

## தற்போதைய ஆட்சி முறையை மாற்றுவதற்கு பாடுபடுவேன்

**பிரதமர் தெரிவிப்பு**



தற்போதைய ஆட்சி முறையையும் மற்றும் அரசாங்க அமைப்பையும் மாற்றுவதற்கு நிச்சயமாக பாடுபடுவேன் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். அதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். கொஸ்கம பொரலுகொட ஸ்ரீ வர்தனாராமயே விகாரையின் விகாராதிபதியின் நலன் விசாரிப்பதற்காக சென்ற போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் ஸ்திரத்தன்மையை நிரூபித்து காட்டுங்கள்

சர்வதேச நிறுவனங்கள், அமைப்புக்களிடமிருந்து ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். அதன்படி சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜைக்கா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் மத்தியில், நாட்டின் ஸ்திரத்தன்மை உறுதியாக உள்ளது என்பதை அரசாங்கம் காண்பிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

## அவசரகால சட்டத்தில் சிலவற்றில் திருத்தம்

ஜ•லை 18ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்ட அவசரகால சட்டங்கள் சில பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் திருத்தப்பட்டுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை (05) வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, தேடுதல் மற்றும் கைது தொடர்பான குற்றவியல் சட்டத்தின் பிரிவுகள் 365 (அ) மற்றும் 365 (ஆ) சரத்துகள் நீக்கப்பட்டு அதே பிரிவின் 408 மற்றும் 410 முதல் 420 வரையான சரத்துகள் அவசரகாலச் சட்டங்கள் தொடர்பாக சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், உயர் நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் விதிக்கப்படும் தண்டனைகள் தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட அவசர உத்தரவுகளின் கீழ், குற்றவியல் சட்டத்தின் 365, 365 (அ) மற்றும் 365 (ஆ) ஆகிய பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன.

## திராய்க்கேணியின் நிலைமை தான் கிழக்கு மாகாணத்திற்கும் நேரும்

**கலையரசன் எம்பி பேச்சு**

**(காரைதீவு நிருபர் சகா)**

தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாவிட்டால் எதிர்காலத்தில் திராய்க்கேணியின் நிலைமை தான் முழு கிழக்கு மாகாணத்திற்கும் நேரும். இவ்வாறு திராய்க்கேணி படுகொலை தினத்தில் உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் குறிப்பிட்டார்.

1990 ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்ற திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 32 வது வருட நினைவேந்தல் நிகழ்வுஇ சம்பவம் இடம்பெற்ற திராய்க்கேணி

02

## இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மையை எதிர்பார்க்கின்றேன்

இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மையை தான் எதிர்பார்ப்பதாக ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடா தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வாழ்த்து செய்தி அனுப்பியுள்ள அவர், அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம் என சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல்கள் மூலம் இலங்கையின் அபிவிருத்திக்கு விரைவான முன்னேற்றம் ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ–பசிபிக் கொள்கைக்கு ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் ஜப்பானிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா. மனித உரிமை பேரவை உயர்மட்ட குழு அடுத்த மாதம் இலங்கை விஜயம்

இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்து நேரில் கண்டறிவதற்காக ஐ.நா. மனித உரிமை பேரவையின் உயர் மட்ட குழுவொன்று அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிரிவிற்கான தலைவர் ரொனி முங்கொவன் தலைமையில் இந்த குழு இலங்கை வரவுள்ளது.

## போராட்டகாரர்களுக்கு புதிய இடம்



புறக்கோட்டை – மெனிங் சந்தைக்கு அருகில் உள்ள மிதக்கும் சந்தைப் பகுதியை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வ ழ ங ் கு வ த ற ் கு தீ ர் மா னி க் க ப் ப ட் டு ள் ள து . ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் ஜனாதிபதி இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## பல வருடங்களின் பின்னர் இலாபம் ஈட்டிய லிட்ரோ

கடந்த ஜ•லை மாதம் பல வருடங்களின் பின்னர் லிட்ரோ நிறுவனம் இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாறியுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார். குறித்த காலப்பகுதியில் நாட்டில் நிலவும் சமையல் எரிவாயு சிலிண்டர் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், கடந்த 22 நாட்களில் சுமார் 27 லட்சம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேபோல் சர்வதேச சந்தை விலையுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை நாளை (08) பிற்பகல் குறைக்கப்படும் எனவும் லிட்ரோ தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

## மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக விளைச்சல்கள் சேதமடைந்துள்ளமையினால் எதிர்வரும் வாரங்களில் மரக்கறிகளின் விலை 40 முதல் 50 சதவீதத்தால் அதிகரிக்கக் கூடும் என அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் குழு தெரிவித்துள்ளது. மலைநாட்டு மரக்கறிகளின் விலை 60 முதல் 70 சதவீதத்தால் அதிகரிக்கக் கூடும் என்று அதன் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

02

## மின் கட்டண அதிகரிப்பு குறித்த அறிவிப்பு

மின் கட்டண திருத்தம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட உள்ளது. அது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை (08) இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான கலந்துரையாடல் திறைசேரி, மின்சக்தி அமைச்சு, மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு இடையில் நடத்தப்பட

02




திராய்க்கேணி படுகொலை நாள் நினைவு நிகழ்வு

## இலங்கைக்கான கடனை நிறுத்திய சீனா

இலங்கைக்கான 51 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை சீன அரசுக்கு சொந்தமான எக்ஸிம் வங்கி நிறுத்தி வைத்துள்ளது. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் முதல் கட்ட கட்டுமானத்திற்கு தேவையான கடனுதவியே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கடன் நிறுத்தப்பட்டமையை அடுத்து கடவத்தைக்கும் மீரிகமவுக்கும் இடையிலான 37 கிலோமீற்றர் தூரத்தை உள்ளடக்கிய திட்டத்தில் பணிபுரிந்த சுமார் 500 ர் சீனர்கள். அங்கிருந்து வெளியேறி வருகின்றனர். அத்துடன் இந்த கடன் நிறுத்தல் காரணமாக சுமார் 2000இலங்கையர்களின் தொழில்களும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ளன. இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதை இலங்கை நிறுத்தியுள்ளமை ஆகியவற்றை கருத்திற்கொண்டே இலங்கை அரசாங்கத்தின் சீனாவின் எக்ஸிம் வங்கி கடனை இடைநிறுத்தியுள்ளது.

02

## இலங்கைக்கான கடனை நிறுத்திய சீனா

மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டம் 2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நெடுஞ்சாலையில் இதுவரை இலங்கை அரசாங்கத்தின் 33 பில்லியன் ரூபா நிதியில் சுமார் 32 வீதமான வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

ஒரு கிலோகிராம் கரட் மொத்த விற்பனையின் கீழ் 260 ரூபா முதல் 290 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.கோவா ஒரு கிலோகிராம் 230 ரூபா முதல் 260 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. லீக்ஸ் 130ரூபாவிலிருந்து 170 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது. இந்தநிலையில் மரக்கறிகளின் விலை 40 முதல் 50 சதவீதத்தால் அதிகரிக்கக் கூடும் என அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் குழுவின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## மின் கட்டண அதிகரிப்பு குறித்த அறிவிப்பு

உள்ளது. மின் கட்டணத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் தொடர்பாக இங்கு இறுதி உடன்பாடு எட்டப்பட உள்ளது. மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான முன்மொழிவுகளை மின்சார சபை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளதுடன், பொதுமக்களின் கருத்துக்களும் அண்மையில் பெறப்பட்டன. அதன்படி, இறுதிகட்ட கட்டண திருத்தம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட உள்ளது.

## திராய்க்கேணியின் நிலைமை தான் கிழக்கு மாகாணத்திற்கும் நேரும்

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்றது. அகம் மனிதாபிமான வள நிலையமும்இ சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பும் இணைந்து இந் நிகழ்வை ஏற்பாடு செய்தனர். சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் மற்றும் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில்இ பிரபல சமூக செயற்பாட்டாளர் த.பிரதீபன்இசூழலியல் அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளர் ரி.கிருஷாந்த் இஅகம் அமைப்பின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் திருமதி நவரட்ணம்அஞ்சலிதேவி ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

ஆரம்பத்தில் இபடுகொலையின் போது வெட்டிக்கொலை செய்யப்பட்ட 54 பேரின் திருவுருவப் படங்களுக்கு முன்னால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. மலர் அஞ்சலி செலுத்தி அக வணக்கம் செலுத்தப்பட்டது. படுகொலை சம்பவத்தில் கணவர்மாரை இழந்து விதவைகளான 40 பேரில்இ நேரிலே கண்முன்னே சம்பவத்தை பார்த்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இரண்டு தாய்மார்களான அன்னம்மாஇ மாரிமுத்து மற்றும் கிராம தலைவர் சி.கார்த்திகேசு ஆகியோர் அழுது அழுது உரையாற்றினார்கள்.

அங்கு பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் மேலும் உரையாற்றுகையில்...

இலங்கை நாட்டிலே சுதந்திரத்திற்கு பின்பு திட்டமிட்டவகையில் 1956 இ1985 இ1990இ2009 வரை தமிழ் மக்கள் திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்டு வந்திருக்கின்றார்கள். ஆனால் இதுவரை அப் படுகொலைகளுக்கு நீதியோஇ நஷ்ட ஈடோ கிடைக்கவில்லை.

எந்த இனமாக இருந்தாலும் ஆலயம் என்பது புனித ஸ்தலமாக இருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையில் இந்து ஆலயத்தில் தான் அதிகமான படுகொலைகள் இடம் பெற்று இருக்கின்றன. அரசாங்கமே ராணுவத்தையும்இ முஸ்லிம் ஊர்காவல் படையினரையும் பயன்படுத்தி இந்த திட்டமிட்ட படுகொலையை செய்தது .

அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி மட்டும் அல்ல உடும்பன் குளத்திலே 151 விவசாயிகள் சுற்றி வளைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதேபோன்று சொறிக்கல்முனையில் பங்குத்தந்தை செல்வராஜா பாதர் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். வீரமுனையிலும் ஆலயத்தில் வைத்து நூற்றுக்கணக்கான அப்பாவி தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இந்த வரலாற்றை எல்லாம் நாங்கள் அடுத்த சந்ததிக்கு எடுத்துசெல்ல வேண்டும். சமகால சந்ததியினர் சுதந்திரமாக நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக இத்தகைய நிகழ்வுகள் நடைபெறுகின்றன..

அம்பாறை மாவட்டத்திலேயே 58 தமிழ்கிராமங்களை இலக்கு வைத்து இன அழிப்பு நடத்தப்பட்டது. ஆலங்குளம்இ மீனோடைக்கட்டு போன்ற கிராமங்கள் ஒரு தமிழர்களும் இல்லாமல் முற்றாக கபளீகரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் இனவாதிகள் இணைந்து செய்தார்கள் என்பது மாற்றுக் கருத்துக்களுக்கு இட இல்லை. எமது அடையாளத்தை நாங்கள் பேணவேண்டுமாக இருந்தால் அரசியல் ரீதியான தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் தொடர்ச்சியாக அமைதி வழி அறவழிப்போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அதைத்தான் எமது கட்சியும் செய்து கொண்டிருக்கிறது. என்றார்.

ஆலய தலைவர் ரி.யோகநாதன் நன்றி உரையாற்றினார்.



திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 32 வது வருட நினைவேந்தல் நிகழ்வு, சம்பவம் இடம்பெற்ற திராய்க்கேணி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற போது..

## அம்பாறை மத்திய முகாமில் நூறுநாள் உரிமை போராட்டம்



( காரைதீவு நிருபர் சகா)

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற நூறு நாட்கள் செயல்முனைவின் ஓரங்கமாக இன்று (7)ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மத்திய முகாமில் நூறுநாள் உரிமை போராட்டம் நடைபெற்றது. இதன் கருப்பொருள் "கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" என்பதாகும்.

அம்பாரை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நான்காம் கிராமம் ஸ்ரீ பாமடி சித்தி விநாயகர் ஆலய மூன்றில் இருந்து நடைபவனியாக வருகை தந்த மக்கள் இவ்வாறான கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

சுமார் 200க்கும் மேற்பட்ட பெண்கள் அமைப்புகளை சேர்ந்தவர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களை சேர்ந்தவர்கள் ,விவசாய அமைப்புகளை சேர்ந்தவர்கள், இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் என பலரும் கலந்து சிறப்பித்தனர்

## சேனையூரில் "அனாமிகா களரி பண்பாட்டு அமையத்தின்" திறப்பு விழா





(அ . அச்சுதன் )

திருகோணமலை மூதூர் சேனையூரில் பேராசிரியர் பாலசுகுமாரனின் மகள் அனாமிகா நினைவாக அமைக்கபட்ட "அனாமிகா களரி பண்பாட்டு அமையத்தின்" திறப்பு விழா நேற்று 06ம் திகதி இடம் பெற்றது. இந்நிகழ்வுக்கு தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசர் அதிதியாக கலந்து கொண்டார். அத்துடன் கிழக்குப பல்லைக்கழக துணைவேந்தர் வ.கனகசிங்கம் மற்றும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பேராசிரியர் சி.மௌனகுரு பேராசிரியர் ச.மனோன்மணி உற்பட பல பேராசிரியர்களும் யாழ" மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் மற்றும் கிழக்கு மாகாண கலாச்சார திணைக்கள பணிப்பாளர் சு.சரண்யா உட்பட பல அதிதிகள் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து 07ம் திகதியும் கலைஞர்களின் கலைநிகழ்வுகளும் கருத்தாடலும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது நிகழ்வின் போது எடுக்கபட்ட சில புகைப்படங்கள்.




"தேனாட்டில் கதிர்காமம் என புகழ்ந்து கூறும்
தாந்தாமலை சென்று சண்முகனை வழிபட்டால்
அல்லல்போம், தொல்வினைபோம் ஆன
செல்வமத்தனையும் இன்பமுடன் பெற்று இனிது வாழ்வாரே"

அனைத்து விதமான ஆலய வெண்கலப்பொருட்கள், வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

குணா மல்ரி சொப் மற்றும் உமா பென்சி ஹவுஸ்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022

## திருக்கொடியேற்றம்
## 22.07.2022 வெள்ளிக்கிழமை

## தீர்த்தோற்சவம்
## 12.08.2022 வெள்ளிக்கிழமை

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாரை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் – சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இரசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

## 22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்

## 12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்



விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)

# கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகர் ஐ.ஓ.சி க்கு முதலிடம்

நாடு பூராகவும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டினால் மக்கள் இரவு பகலாக மிக நீண்ட வரிசைகளில் காத்திருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து எரிபொருள் அமைச்சர் அதற்கான தீர்வை வழங்கும் நோக்கில் ஞசு திட்டத்தினை தேசிய ரீதியில் அமுல்படுத்தியதன் பிற்பாடு சிபெற்கோ மற்றும் ஐ.ஓ.சி ஊடாக மிக நீண்ட வரிசைகள் இன்றி எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.



இதற்கமைவாக அண்மையில் இலங்கை ஐ.ஓ.சி நிறுவனமானது QR திட்டத்தினை சிறந்த முறையில் நிருவகிக்கும் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களிற்கு தடைகள் இன்றி முன்னுரிமை அடிப்படையில் அதிக எரிபொருளை வழங்குவதாக கூறியிருந்த நிலையில் QR திட்டத்தை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தி ஒரே நாளில் அதிக வாகனங்களிற்கு சீராக எப்பொருளை வழங்கிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை பட்டியல் படுத்தியிருந்தது.

குறித்த பட்டியல் படுத்தலில் மட்டக்களப்பு நகரிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையம் ஒரே நாளில் 1699 வாகனங்களிற்கு எரிபொருள் வழங்கியுள்ளதன் அடிப்படையில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தினையும், கிழக்கு மாகாணத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக மட்டக்களப்பு நகர் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரும் மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவருமான தேசபந்து எம். செல்வராசா கருத்து தெரிவிக்கையில், குறித்த ஞசு திட்டமானது நடைமுறைக்கு வந்ததன் பிற்பாடு வாகனங்களின் வகைக்கேற்ப வரையறுக்கப்பட்ட அளவுத்திட்டங்களிற்கு அமைவாக அதிகளவிலான வாகனங்களிற்கு தம்மால் எரிபொருளை வழங்க முடிந்திருந்ததுடன், வரிசைகள் இன்றி மக்கள் சிரமங்களை எதிர்கொள்ளாது மக்கள் தற்போது தமக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதை காண முடிவதுடன், இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த அனைத்து தரப்பினரும் குறிப்பாக பொதுமக்கள் தமக்கு உதவி புரிந்தமையினாலேயே தம்மால் சாதிக்க முடிந்திருந்ததாகவும், அனைத்து தரப்பினருக்கும் தமது ஊழியர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் தனது நன்றிகளை தெரிவித்துள்ளார்.

# மலையக மக்களின் பிரச்சினைக்கு தீர்வு

**ஜனாதிபதி உறுதியளித்ததாக கணபதி கனகராஜ் தெரிவிப்பு**

**தலவாக்கலை பி.கேதீஸ்**



மலையக மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக உரிய தீர்வை வழங்க தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவிடம் தெரிவித்துள்ளார் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடல் நடத்தியது. நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்து மக்களுக்கு சிறந்த வாழ்வாதாரத்தை பெற்றுக் கொடுக்கும் தனது முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்த ஜனாதிபதி, மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த விடயங்களை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார். ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது மலையக மக்கள் எதிர் நோக்குகின்ற நடைமுறை பிரச்சனைகள் பற்றியும், தொடர்ச்சியாக கோரிக்கைகளாகவே இருந்து வருகின்ற பிரச்சனைகள் பற்றியும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதில் பிரதானமாக நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருந்த பிரதேச செயலகங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும். சமுர்த்தி திணைக்களத்தினூடான சேவைகள் பெருந்தோட்ட பிரதேசத்தின் சகல மக்களுக்கும் சென்றடையும் வகையில் விஸ்தரிக்கப்பட வேண்டும். மற்றும் ஸ்ரீபாத கல்வியல் கல்லூரியின் அனுமதி நடைமுறை காலம் கடந்ததாக காணப்படுகின்றது. இந்த அனுமதி நடை முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி தற்போதைய காலத்துக்கு ஏற்றவாறு புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மலையகப் பகுதிகளுக்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பண்டங்களை பற்றாக்குறை ஏற்படுவதை நிவர்த்தி செய்து அவற்றை கிரமமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் போக்குவரத்து செலவுகள் அதிகரித்துள்ளதால் தோட்டங்கள் தோறும் கூட்டுறவு சங்கங்கள் மூலமான உணவு விநியோகத்தை மேற்கொண்டு மக்களின் நாளாந்த தேவைகளை நிவர்த்தி கொள்வதற்கான நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட எமது பிரதான கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி தரப்பிலிருந்து சாதகமான பதில்கள் கிடைத்துள்ளன.இந்த வகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்காலத்தில் அமைக்கப்படுகின்ற சர்வ கட்சி அரசாங்கத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழு ஜனாதிபதியிடம் தெரிவித்தது என்றார்.

# "கோனாதொட்ட ஊடக அபிமான்" விருது

**(எப்.முபாரக் )**

திருகோணமலை மாவட்டத்தில் 36 வருடங்களாக ஊடகத்துறையில் பணியாற்றிய மறைந்த கந்தளாய் ஊடகவியலாளர் கே.டி.விஜேபால அவர்களுக்கு திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஜக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் வழங்கப்படும் உயரிய விருதான "கோனாதொட்ட ஊடக அபிமான்" விருது சனிக்கிழமை (06) வழங்கி கௌரவிக்கப்பட்டது. கந்தளாய் பிரதேச கல்விப் பணிப்பாளர் ஈ.ஜி.பிரபாஸ் தர்மதிலகவினால் இந்த விருதினை விஜேபாலவின் மனைவி திருமதி.எச்.டி.சோமவதிக்கு கந்தளாய் மத்திய மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இதன் போது, "அதிபராக செயற்பட்ட விஜேபால" என்ற தொனிப்பொருளில் அதிபர்கள் சங்கத்தின் தலைவர் திரு.லக்பிரிய பண்டாரவும், "நட்புமிக்க ஊடகவியலாளர் விஜேபால" என்ற தலைப்பில் ஊடகவியலாளர் சுகத் விஜேகுமாரவும், உரையாற்றினர் . மறைந்த ஊடகவியலாளரின் மூன்று பிள்ளைகளும் அவரது நினைவாக இரு பாடசாலை நூலகத்திற்கு புத்தகங்களை வழங்கி வைத்தனர்.

மேலும் விஜேபாலவின் சேவையை பாராட்டி வாசிக்கப்பட்ட கவிதையை ஊடகவியலாளர் சங்கத்தின் அமைப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கியாஸ் ஷாபியினால் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்வி அதிகாரிகள் மற்றும் பல்வேறு சமூக அமைப்பின் உறுப்பினர்கள் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# சேனையூரில் திரைப்பட நடிகர் நாசர் புகழாரம்



**(அ . அச்சுதன், வடமலை ராஜ்குமார்)**

ஒரு கோட்டையைக் கட்டுவதை விடவும் உன்னதமான விடயம். இந்த அனாமிகா களரி பண்பாட்டு மையம் கட்டியது இங்கு பகட்டான விடயம் ஒன்றும் கிடையாது. நான் ஒரு விதத்தில் பொறாமையும் கொள்கின்றேன். நாங்களும் நடிகர் சங்கத்திற்கு ஒரு கட்டிடம் கட்டிக்கொண்டிருக்கின்றோம். பல பிரபலங்கள் இருந்தும் பல ஆண்டுகளாகிறது. ஆனால் ஒரு எளிய மனிதனாக இருந்து தன்னுடைய நண்பர்கள் மூலமாக தெரிந்தவர்கள் மூலமாக செங்கல் செங்களாக பெற்று இந்த கலைக் கூடத்தை கட்டி முடித்துள்ளார்.பேராசிரியர் பாலசுகுமார் அவர்கள் என தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசர் அவர்கள் புகழாரம் சூட்டினார்.

திருகோணமலை மூதூர் சேனையூரில் அமைக்கபட்டுள்ளது அனாமிகா களரி பண்பாட்டு மையம் திறப்பு விழாவிற்கு சனிக்கிழமை (06) அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து தனது உரையில்.. சேனையூருக்கு வந்தது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. பேராசிரியர் பாலசுகுமாரன் ஐயா அவர்களை நான் வெகு நாட்களாக அறிவேன். நாடகம் எங்களுக்கு பொது மொழியாக இருந்தது.அவருடைய மாணவர்கள் என்னுடைய மாணவர்களாக இருந்திருக்கிறார்கள். நாங்கள் எப்போது பேசினாலும் நாடகங்களைப் பற்றி வெகுவாக பேசுவோம் நிகழ்கலைக்களைப் எவ்வாறு பாதுகாக்கலாம் என்று போசுவோம்.அந்த உறவில் மலர்ந்ததுதான் எங்கள் நட்பு

ஒரு நாள் மிகுந்த துயரச்செய்தியோடு என்னிடம் வந்தார் பாலசுகுமாரன் ஐயா அவர்கள் தான் பல கனவுகளுடன் அன்பாக வளர்த்த தனது குழந்தை தன் எதிரிலேயே இயற்கை இழுத்துச் சென்றது என்றார். அவருக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்றே எனக்கு தெரியவில்லை.நான் ஐயோ என்று கூட சொல்லவில்லை உறைந்து போய் நின்றேன்.

ஆனால் அதனுடைய மிகப் பெரிய சிறப்பு பெற்றோருக்கு ஓர் குழந்தையின் இழப்பு என்பது அதுவும் அந்த வயதினில் என்பது மிகப்பெரிய இழப்பு ஆனால் அதை ஒரு வைராக்கியமாக எடுத்துக் கொண்டு இந்த இழப்பையும் துயரத்தையும் ஒரு ஆக்கபூர்வமாக செய்ய முடியும் என்று ஒரு படிப்பினையை அவர் செய்து காட்டி இருக்கிறார்.ஆக இந்த நூலகம் மற்றும் பண்பாட்டு மையம் என்பது ஒரு பெரிய படிப்பினை நாம் எவ்வளவோ அழுக்கின்றோம் எவ்வளவோ வருத்தப்படுகின்றோம் அவற்றை எல்லாம் ஒன்று திரட்டி ஒரு ஆக்கபூர்மாக மாற்ற முடியும் என்பதற்கு உதாரணமாக என்னுடைய நண்பரான பேராசிரியர் பாலசுகுமாரன் ஐயா செயலாற்றி இருக்கிறார்.என தென்னிந்திய திரைப்பட நடிகரும் இயக்குனருமான நாசர் தெரிவித்தார்.

# அவுஸ்திரேலியாவின் ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கத் தலைவராக ரிசா ஜமால் தெரிவு



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

அவுஸ்திரேலியவில் இயங்கும் ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கத்தின் தலைவராக ரிசா ஜமால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர், ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கம் (USMAA) மற்றும் சமூகத்தில் நன்கு அறிந்த நபராக, கிட்டத்தட்ட 2 தசாப்தங்களாக மெல்போர்னில் வசிக்கிறார். அத்தோடு, சுமார் 30 வருட காலம் நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் பல சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். மேலும் பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கத்துக்கு பக்கபலமாக இருந்து உதவியுள்ளார்.

CIMA(UK) மற்றும் CA (Australia) உடன் செயற்படும் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவரான இவர், இப்போது அவுஸ்திரேலியாவின் ருளுஆயுய (ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்க) த்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்நிகழ்வில் முஸ்லிம் கவுன்சில் ஒப் சிறிலங்காவின் உயர்பீட உறுப்பினர் எம்.ரி.எம். றிஸ்வியும் கலந்து கொண்டார்.

# உகந்தைமலை முருகன் ஆலயத்தில் ஆடிவேல் திருவிழா





**(காரைதீவு நிருபர் சகா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலயத்தில் ஆடி வேல் விழா உற்சவ திருவிழாப் பூசைகள் தினமும் நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை ஆடிவேல்விழா தீர்த்தோற்சவம் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபை வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உகந்தை மலை முருகன் ஆலய பிரதமகுரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் திருவிழா பூஜைகளை நடாத்திவருகிறார். உதவியாக உதவிக்குழு கோபி சர்மா இயங்கி வருகிறார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஏற்பாட்டில் ஆலய நடைமுறைகள் கண்காணிக்க பட்டு வருகிறது. வரலாறு காணாத வகையில் இம்முறை 29654 அடியார்கள் காட்டுப் பாதை வழியாக கதிர்காமம் பாதயாத்திரை சென்றுள்ளனர்.

முதல் தடவையாக இந்து சமய கலாசார முறைப்படி கழுகுமலை பத்து பாடி திறந்து வைக்கப்பட்டமை தெரிந்ததே. கொரோனா காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக காட்டுப் பாதை திறக்கப்படவில்லை என்பதும் தெரிந்ததே.


# திருகோணமலையில் புகையிரத சேவை மீண்டும் ஆரம்பம்

**எப்.முபாரக்**

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கும் திருகோணமலைக்குமான தபால் புகையிரத சேவை நீண்ட நாட்களுக்கு பின்னர் மீண்டும் மீள ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி இரவு 9.30 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்படுவதுடன் திருகோணமலையிலிருந்து இரவு 7.00 மணிக்கும் புறப்படும். முதல் வகுப்பு குளிரூட்டப்பட்ட, இரண்டாம் வகுப்பு மற்றும் மூன்றாம் வகுப்பு இருக்கை முன்பதிவு வசதியுடன் இரவு தபால் புகையிரத சேவை இடம்பெறும் எனவும் திருகோணமலை புகையிரத நிலைய அதிபர் தெரிவித்தார்.



# மூன்று நாள் இணையத்தள பயிற்சிநெறி



**ஹஸ்பர்**

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் உள்ள சமுர்த்தி வங்கியாளர்களுக்கான இணையத்தள பயிற்சி நெறியொன்று நேற்று (06) பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் 97ம் கட்டை சந்தியில் உள்ள வங்கி கட்டிடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதில் தம்பலகாமம் சமுர்த்தி வங்கி, தம்பலகாமம் கிழக்கு சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் வளவாளராக திருகோணமலை மாவட்ட சமுர்த்தி இணையத்தள பொறுப்பதிகாரி வீ.அன்வர்கான் கலந்து கொண்டார். இப் பயிற்சி நெறியானது மூன்று நாட்கள் இடம் பெறவுள்ளது .இதில் இணையத்தள பாவனை, வங்கி கணக்கு தொடர்பிலான ஒன்லைன் முறை உள்ளிட்ட பல தகவல் தொழில் நுட்ப முறைமை என பல விடயங்கள் பயிற்சியளிக்கப்பட்டன.

இதில் சமுர்த்தி தலைமைமுகாமையாளர் ஏ.ஆர்.எம். சித்திக், வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹிஸ்புல்லா உட்பட சமுர்த்தி வங்கி ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெறக்கூடிய வாய்ப்பை தட்டிக்கழிக்காதீர்

கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி
Eastern Muslim Alliance
නැගෙනහිර මුස්ලිම් පෙරමුණ

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமூகம் சார்ந்த கோரிக்கைகளுக்கான உத்தரவாதங்களை பெற்றுக் கொண்டு, அமையப்போகும் சர்வகட்சி அரசாங்கத்தில் முஸ்லிம் கட்சிகளும் இணைந்து கொள்ள வேண்டும். சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெறக்கூடிய நல்லதொரு வாய்ப்பை தட்டிக்கழித்து, தவற விட வேண்டாம் என கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ்விடயத்தை வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் தலைமைகளுக்கு அவசர கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதை இலக்காகக் கொண்டு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியதாக சர்வகட்சி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருப்பதுடன் அதற்கான அழைப்பை அனைத்து கட்சிகளுக்கும் விடுத்திருக்கிறார்.

இவ்விடயமாக அரசியல் கட்சிகளுடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றார். சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உறுதியளித்திருக்கிறது. பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவுக்காக போட்டியிட்ட டலஸ் அணியும் இதற்கு உடன்பட்டிருக்கிறது. ரணிலை அங்கீகரிக்காத மைத்திரி, விமல் வீரவன்ச, உதய கம்பன்பில போன்றோரும் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தமிழ்மக்களைபிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, விக்னேஸ்வரன் அணி போன்றவை தமது சமூகம் சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றுக்கான உத்தரவாதங்களைப் பெற்றுக் கொண்டு, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து செயற்படுவதற்கு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தவரை தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, ஜனாதிபதி ரணிலை சந்தித்து, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் அமைச்சுப் பதவி தவிர்ந்த, சமூகம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் அவர் ஏதாவது பேசினாரா என்பது பற்றி அறியக்கிடைக்கவில்லை.

அதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன தாம் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் என்ற ரீதியில் இதுவரை ஜனாதிபதியை சந்தித்து எதுவும் பேசவில்லை. இவ்விரு கட்சிகளும் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கின்ற பங்காளிக்கட்சிகள் என்பதால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எடுக்கும் தீர்மானத்துடன் இணங்கிப்போதல் என்ற நிலைப்பாட்டுடனேயே தொடர்ந்தும் இருப்பதாக அறிய முடிகிறது.

எவ்வாறாயினும் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு சஜித் பிரேமதாச உடன்பட்டிருக்கின்ற நிலையில் கூட சமூகம் சார்ந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பிரத்தியேகமாகப் பேசுவதற்கு இவ்விரு முஸ்லிம் கட்சிகளும் ஆர்வம் காட்டாமல் ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னால் ஒளிந்து கொண்டிருப்பதானது முஸ்லிம் சமூகத்தினரிடையே பெரும் கவலையையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் சமூக மட்டத்தில் எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை. குறைந்தபட்சம் ஷூரா சபை, உலமா சபை, முஸ்லிம் கவுன்சில் உள்ளிட்ட தேசிய ரீதியிலான சிவில் அமைப்புகளின் ஆலோசனைகளையாவது பெற்று செயற்படலாம். எந்தவொரு தூரநோக்கு சிந்தனையும் இல்லாமல் தமது எதிர்கால பிரதிநிதித்துவ அரசியலை மாத்திரம் மையமாகக் கொண்டே முஸ்லிம் கட்சிகளின் தலைமைகளும் இருபதாவது திருத்தத்தை ஆதரித்து விட்டு உதிரிகளாக இயங்குகின்ற அக்கட்சிகளின் எம்.பி.க்களும் செயற்பட்டு வருகின்றனர்.

பல்வேறு கோரிக்கைகளுடன் டலஸ் அழகப்பெருமவை ஆதரித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பானது அதே கோரிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்து, உத்தரவாதங்களைப் பெற்றுக் கொண்டு சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால் இப்படியான நல்லதொரு வாய்ப்பை முஸ்லிம் கட்சிகள் தவற விடப் போகின்றனவா என்று சமூகம் அங்கலாய்க்கிறது. தற்போது 24 மணி நேரமும் திறந்திருக்கின்ற ஜனாதிபதியின் வாசல் மூடப்பட்டால், பின்னொரு சந்தர்ப்பத்தில் எவ்வளவு தட்டினாலும் திறக்கப்படாமல், ஜனாதிபதியை சந்திக்கக்கூடிய வாய்ப்புக்கூட கிடைக்காமல் போகலாம்.

ஆகையினால் முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் இனியும் தாமதியாமல் கிடைத்திருக்கின்ற நல்ல வாய்ப்பை பயன்படுத்தி, ஜனாதிபதியினால் நிறைவேற்றுவதற்கு சாத்தியமான முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துப் பேச வேண்டும் என கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது– என்று அதன் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

## காட்டுப் பாதையில் அவதானம் செலுத்தும் மொனராகலை அரசாங்க அதிபர்

( காரைதீவு நிருபர் சகா)

மொனராகலை அரசாங்க அதிபர் குணதாச சமரசிங்க கதிர்காம காட்டுப் பாதையில் பயணிக்கும் பாதயாத்திரை அடியார்களின் சேமநலன்களை தினமும் பார்வையிட்டு, அவதானித்து உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். கள்ளவியாழையிலிருந்து கதிர்காமம் வரைக்குமான குடிநீர் வினியோகம் மற்றும் அன்னதானம் சேமநலன்கள் தொடர்பாக தினமும் ஆராய்ந்து வருகிறார். அவ்வப்பொழுது அவதானித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

அந்த வகையில், கள்ள வியாழையில் அமைந்திருக்கின்ற அன்னதான சாலையையும் அவதானித்து அங்கு சோறு உட்பட கறி சமைக்கின்ற விதத்தையும் சுகாதார முறைப்படி உணவு தயாரிக்க படுகின்றதா? என்பதையும் நேரடியாக சுகாதார பரிசோதகர்களோடு பார்வையிட்டு வருகின்றார். அன்னதானம் தொடர்பாக அவர் திருப்தி தெரிவித்தார் . அவருடன் மேலதிக அரசாங்க அதிபர் பிரதீப் குணதிலக, மற்றும் போலீஸ் அத்தியட்சகர் சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட பல உயர்மட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.



“வேண்டுவார் வினைதீர்க்கும் வேலவன் வீற்றிருக்கும் தாந்தாமலைப் பதியை தானாடிச் சென்றிடுங்கால் தொல்வினைகள் தீர்த்து துயரங்கள் அகன்று இன்பமுடன் வாழ்வார் உலகில்”

தாந்தாமலை ஸ்ரீ முருகனுக்கு மகோற்சவப் பெருவிழா – 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

விளம்பர அனுசரணையாளர் : முத்துலிங்கம் அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# அமைச்சுப் பதவிகளை பகிர்ந்துகொள்வதை விட பொதுவான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துங்கள்

**ஜனாதிபதியிடம் எடுத்துரைத்ததாக ரிஷாட் எம்.பி தெரிவிப்பு!**

பதவிகளுக்கென கட்சிகளை ஒன்று சேர்க்காமல், நாட்டுக்காக அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பொதுவான வேலைத்திட்டம் ஒன்றை முன்வைக்குமாறும், அந்த வேலைத்திட்டத்திற்கு எமது ஆதரவு கிடைக்கும் எனவும் ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் குறிப்பிட்டார். சர்வகட்சி தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், "நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலையை மாற்றி அமைப்பதற்காகவும், மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் இன்னோரன்ன தேவைகளை எளிதில் நிறைவேற்றும் வகையிலும், கியூவில் நின்று பொருட்களை பெரும் கலாச்சாரத்தை முற்றாக ஒழிக்கும் வகையிலும் ஜனாதிபதி எடுக்கும் நல்ல நடவடிக்கைகளுக்கு நாம் பூரண ஒத்துழைப்பு நல்குவோம் எனவும் இச்சந்திப்பில் உறுதியளித்தோம்.

மேலும், காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிவைத்து கைது செய்யப்பட்டமை மற்றும் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஸ்டாலினின் கைது தொடர்பிலும் எமது ஆட்சேபனையையும் கவலையையும்



தெரிவித்ததோடு, இவ்வாறான பயமுறுத்தல் நடவடிக்கைகள்நாட்டின்பொருளாதாரத்தை இன்னும் அதலபாதாளத்திற்கு கொண்டு செல்லும் என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

19 ஆவது திருத்தத்தை உடனடியாகக் கொண்டு வந்து, அதனை விரைவாக நடைமுறைப்படுத்துமாறும், பாராளுமன்றத்தில் அமைச்சுக்களை கண்காணிக்கும் குழுக்களை அமைக்குமாறும் வேண்டுகோள் விடுத்தோம். அத்துடன், அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி, வகைதொகையின்றி ஆட்களை கைது செய்யும் நடவடிக்கையை உடன் நிறுத்துவதுடன், அவசரகாலச் சட்டத்தில் தொடர்ந்து நீடிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தினோம். இனவாதத்தையும் மதவாதத்தையும் கக்கி ஆட்சிக்கு வந்தவர்கள், கடந்த காலங்களில் நாட்டினதும், மக்களினதும் நலனைக் கருத்திற்கொள்ளாது செயற்பட்டமையை உணர்த்தியதுடன், இனவாதத்தை விதைப்பதன் ஊடாக தங்களது அரசியல் இருப்பு நீடிக்கும் என்ற தப்பெண்ணம் கொண்டு செயற்பட்டதனால்தான், இந்த நாடு இவ்வாறான கீழ்நிலைக்கு தள்ளப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டினோம். ஆகையால், எதிர்காலத்தில் இனவாத சக்திகளின் கரங்களை ஓங்கவிடாமல் பாதுகாக்க வேண்டும் எனவும், அந்த விடயத்தில் கூடிய கவனஞ்செலுத்துமாறும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம்" என்று அவர் தெரிவித்தார்.

# சுகாதார விழிப்பு கலந்துரையாடல்



**(எப்.முபாரக்)**

கிண்ணியாவின் சுகாதாரத் துறையினருக்கும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் பிற்குமிடையிலான சந்திப்பு கிண்ணியாவில்(7) இடம்பெற்றது. இதன் போது எதிர்கால முன்னெடுப்புக்கள் சம்மந்தமான விரிவாக கலந்துரையாடப்பட்டன. கட்டையாறு, மாலிந்துறை, பெரியாற்றுமுனை, சின்ன கிண்ணியா போன்ற பகுதிகளில் அதிகரித்துவரும் புற்று நோய்கான காரணங்கள்.

கொரோனா, குரங்கு அம்மை போன்ற தொற்றுக்களுக்கு எதிர்காலத்தில் எவ்வாறு முகம்கொடுப்பது உள்ளிட்ட சுகதார துறை சார்ந்த பல விடயங்கள் கலந்துரையாடபட்டன.

இப்பகுதிகளில் எதிர்காலத்தில் மேறகொளளபபடவுளள விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதன்போது கிண்ணியா பிரதேச செயலாளர் கனி, கிண்ணியா சுகதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரிஸ்வி, குறிஞ்சாக்கேனி சுகதார வைத்திய அதிகாரி வைத்தியர் அஜித், சூறா சபை தலைவர் பரீட் (ஓய்வுபெற்ற அதிபர்)வைத்தியர் சவ்பான், வைத்தியர் மாஸாத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# ஸ்டார் கல்லூரியின் "அறிவுச்சமர்" இறுதிப்போட்டி பரிசளிப்பு

**நூருல் /ஹுதா உமர்**

கல்முனை ஸ்டார் கல்லூரியினால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "அறிவுச்சமர்" போட்டித் தொடரின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் கல்முனை தனியார் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக தென் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஷ் அபூபக்கர் கலந்து கொண்டார். அத்துடன், தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப்பதிவாளர் ஏ.எச். நபார், கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட் மற்றும் கல்முனை கமு ஃ அஸ்–சுஹரா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டதுடன், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். மாணவர்களின் அறிவு, தேடல் மற்றும் சுயகற்றல் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போட்டி நிகழ்ச்சியானது, லீக் போட்டி, காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி என பல சுற்றுக்களாக இடம்பெற்றிருந்தமைகுறிப்பிடத்தக்கது.




"தா" என்றால் "இந்தா" என்று வழங்கும்

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய

வருடாந்த மகோற்சவப் பெருவிழா 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!

விளம்பர அனுசரணையாளர் : தாந்தியான் வேதநாயகம் (முனைக்காடு)